# உடன்பிறப்பே...

83

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த உ.கணபதி ராமசுப்பையா அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

ஓவியம் : ரவி பேலட்



# உ.கணபதி ராமசுப்பையா ‘அண்ணாமலைப் பல்கலையின் படையணி!’

*1963*-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, தமிழ்நாட்டு மாணவர்கள் மத்தியில் தீயாகப் பற்றி எரிந்தது. மாணவர்கள் மத்தியில் மொழிகாக்கும் மான உணர்வை, மேடைகள் தோறும், உரைகளாக உரத்துப் பேசினர் கழகத்தின் கொள்கை வீரர்கள். அந்தக் கொள்கை வீரர்களில் ஒருவர் அன்றைய திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் முன்னணியாளர் நெல்லை கணபதி ராமசுப்பையா. 1963-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ஆம் தேதி, திருச்சியில் மாணவர்களால் நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்குத் தலைமை தாங்கி நடத்தியவர். இவர் தலைமையில் அன்று, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் கழக முன்னோடிகளுடன் மூதறிஞர் என்று போற்றப்பட்ட ராஜாஜி அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றிய நிகழ்வு ஒரு வரலாற்றுச் சம்பவம்.

கழகத்தின் அரசியல் களமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இருந்தபோது, அந்த நிலத்தில் விளைந்த பயிராக எழுந்தவர் கணபதி ராமசுப்பையா. அங்கு கல்வி கற்று, கழகப் பணியாற்றியது மட்டுமல்ல, கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, 1965-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் செனட் உறுப்பினர்களுக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர். அதன்மூலம், அந்தப் பல்கலைக்கழகத்தை என்றென்றைக்கும் கழகத்தின் களம் என மாற்றிக் காட்டிய வரலாற்றைக் கொண்டவர் கணபதி ராமசுப்பையா.

### பள்ளியிலேயே கழகம்

திருநெல்வேலி மாவட்டம், கஸ்தூரிரங்கபுரம் ஊராட்சியில் முடவன்குளம் என்கிற ஊரில் பிறந்தவர் கணபதி ராமசுப்பையா. பள்ளிப்படிப்பு எல்லாம் அவரது சகோதரியின் உதவியுடன் அன்றைய வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் பயின்றார். உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற காலத்திலேயே திருப்பத்தூரில் இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி, மாணவர்கள் மத்தியில் இந்தி எதிர்ப்பு உணர்வைத் தூண்டிவிட்டவர்.

கழகத்தின் மும்முனைப் போராட்டத்தில் கலந்துகொண்டு கலைஞர், சிறைக்குச் சென்று திரும்பியபோது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மிகச் சிறப்பான வரவேற்புக்கு ஏற்பாடு செய்தவர் கணபதி ராமசுப்பையா. அப்போது அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயலாளராக இருந்தார். அதையொட்டி தமிழ்நாட்டின் பல கல்வி நிறுவனங்களுக்கும் சென்று மாணவர்களைத் திரட்டும் பணிகளைச் செய்து கழகத்துக்கு வலிமை சேர்த்தார்.

### அண்ணாவுக்குத் தேர்தல் பணி

*1957*-ஆம் ஆண்டு அண்ணாவுக்காக காஞ்சிபுரம் சட்டமன்றத் தேர்தலில் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களைத் திரட்டி வந்து தேர்தல் பணிகளைச் செய்தார். அதனால், அண்ணாமலைப் பல்கலைக்கழக விடுதியில் இருந்து அவரை நீக்கி நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது. அதற்கு உண்ணாவிரதப் போராட்டத்தினைக் கையில் எடுத்தார். அண்ணா, சட்டப்பேரவையில் அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர்களுக்காகக் குரல் எழுப்பினார். “பல்கலை நிர்வாகம் மாணவர்களைத் தண்டிக்கிறது, மாணவர்கள் உண்ணாவிரதத்தை ஆதரித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும்” என ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதற்கு பதில் அளித்த அமைச்சர் சி.சுப்பிரமணியம், “மாணவர்களுக்கு அரசு தகுந்த உதவி செய்யும்’’ என பதில் அளித்துள்ளார்.

### சிறைக்கு அஞ்சா வீரம்

கழகத்தின் முக்கியப் போராட்டங்களில் ஒன்றான, கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் சென்னையில் கலந்துகொண்டு சிறைசென்றவர்.

தமிழக எல்லைமீட்புப் போராட்டங்களில் கழகத்தின் பங்கு என்ன எனக் கேட்பவர்களுக்கு கணபதி ராமசுப்பையா அவர்களின் வாழ்க்கையே உதாரணம். வட ஆற்காடு மாவட்டத்தில், ஏ.எல்.சி.கிருஷ்ணசாமி போன்றோர் திருத்தணியிலும், வி.எம்.ஜான் போன்றோர் குமரி மாவட்டத்திலும், கணபதி ராமசுப்பையா போன்றோர் தேவிகுளம் - பீர்மேடு பகுதியிலும் கலந்துகொண்டு சிறை சென்றனர்.

திராவிடநாடு பிரிவினைக் கொள்கையைக் கைவிடுவது தொடர்பாக கழகத்தின் விவாதம் நடைபெற்றது. அந்தக் கொள்கையைக் கைவிடக்கூடாது எனச் சிலரும், கழகத்தைக் காப்பாற்றப் பிரிவினைக் கொள்கையைக் கைவிடலாம் எனப் பலரும் கருத்துத் தெரிவித்தனர். பிரிவினைக் கொள்கைக்கு ஆதரவாக போராட்டம் நீடித்தால், எத்தனை மாதங்கள் சிறை தண்டனை பெறுவோம் எனத் தெரியாது என்கிற நிலையில், ‘எவ்வளவு காலமானாலும் சிறையில் இருக்கத் தயார்’ என ஒப்புதல் வழங்கியவர்களில் ஒருவர் கணபதி ராம சுப்பையா.

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாவின் படையணிக்குத் தயாரித்துக் கொடுத்த மறவர்களில் மறக்க முடியாதவர், கணபதி ராமசுப்பையா என்பதை கழகம் என்றென்றைக்கும் எழுதி வைத்துள்ளது.**

*1983*-ஆம் ஆண்டு, கைலாசம் குழு அறிக்கையைத் தீ வைத்துக் கொளுத்தும் போராட்டத்திலும் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

### நடைபயணத்தில் தலைவருடன்...

*1982* -ஆம் ஆண்டு திருச்செந்தூர் கோவில் வளாகத்தில், அந்தக் கோவிலின் அதிகாரி சுப்பிரமணியப் பிள்ளை என்பவர் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, மதுரையில் இருந்து நீதி கேட்கும் நடை பயணத்தைத் தொடங்கினார் கலைஞர். அந்த நடைபயணத்தில் கலைஞருடன் தொடக்கம் முதல் இறுதி வரை நடந்தவர்.

கணபதி ராமசுப்பையா, கழகத்தில் எந்தப் பொறுப்பிலும் இல்லை என்றாலும், அவர் வைத்த எந்தக் கோரிக்கையையும் கலைஞர் தட்டியதில்லை. முடவன்குளம் ஊருக்கு முதலமைச்சராக கலைஞர் வருகை தந்து, அந்த ஊரில் குடிநீர்த் தொட்டி திறந்து வைத்துள்ளார்.

“நெல்லையில் இளநிலை மின்பொறியாளராகப் பணியாற்றிய பண்ருட்டி ராமச்சந்திரன், மின்கழக தொ.மு.ச.வில் இருந்து செயல்பட்டதால், நெல்லைக்கு அடிக்கடி சென்று வருவது வழக்கம். அவரைப் பார்க்க, ஒருமுறை கணபதி ராமசுப்பையா வந்தார். இருவரும் நெருங்கிய நண்பர்கள் என அப்போது அறிந்தேன். மாணவர் தி.மு.க.வின் கள வீரர் அவ்வளவு எளிமையாக வந்தது வியப்பளித்தது” என பதிவு செய்கிறார் நெல்லையில் கழக மூத்தவரும், மின்கழக தொ.மு.ச.வில் முக்கியப் பொறுப்பு வகித்தவருமான குமார.சுப்ரமணியம். பின்னர், கழகத்தின் நெருக்கடியான காலத்தில் தனது நெருங்கிய நண்பரான பண்ருட்டி ராமச்சந்திரன் கழகத்துக்குத் துரோகம் செய்துவிட்டுச் சென்றபோதும், தனது தலைவர் கலைஞர்தான் என அசையாமல் நின்றவர், கணபதி ராமசுப்பையா.

ராதாபுரம் வட்டத் தொடக்க விழாவின்போது, எஸ்.டி.சோமசுந்தரம் வருவாய்த்துறை அமைச்சராக வருகை தந்திருந்தார். அந்த மேடையில், அப்பகுதியைச் சேர்ந்த ரங்கபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக பின்வரிசையில் அமர்ந்திருந்தார் கணபதி ராமசுப்பையா. அதைப் பார்த்த எஸ்.டி.எஸ்., ‘அண்ணா மேடைக்கு வாங்க’ என அழைக்க, அருகில் இருந்த அ.தி.மு.க.வினர், ‘அவர் தி.மு.க.காரர், அவரை ஏன் அழைக்கிறீர்கள்?’ எனக் கூறி இருக்கின்றனர். எஸ்.டி.எஸ், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் இருந்தவர் என்பதால், கணபதி ராமசுப்பையாவை அறிவார்.

*2006*-ஆம் ஆண்டு வயதுமூப்பு காரணமாக தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டார் கணபதி ராமசுப்பையா. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அண்ணாவின் படையணிக்குத் தயாரித்துக் கொடுத்த மறவர்களில் மறக்க முடியாதவர், கணபதி ராமசுப்பையா என்பதை கழகம் என்றென்றைக்கும் எழுதி வைத்துள்ளது.

**...துடிக்கும்**

## அமெரிக்கத் தேர்தலும் உலக மனநிலையும்...

அமெரிக்க அதிபர் தேர்தலில் கமலா ஹாரிஸின் தோல்வி, எதிர்பார்த்த ஒன்றுதான் எனத் தனது முகநூலில் பதிவிட்டுள்ள இலக்கிய, அரசியல் திறனாய்வாளர் ஜமாலன், அமெரிக்க இனவெறி உருவாக்கும் உளவியலையும் பதிவு செய்துள்ளார். அவரது பதிவிலிருந்து,

“உலகிலேயே மிக மோசமான ஆணாதிக்கமும், மதவெறியும், இனவெறியும் கொண்ட ஒரு வெள்ளையின உளவியலைக் கொண்ட நாடு அமெரிக்கா. அங்கு வாக்குகளைத் தீர்மானிப்பது, கிறித்துவ மதச்சார்பே. வெள்ளையினம் அறிவில் சிறந்தது, மனிதநேயமிக்கது, நாகரீகமானது என்கிற புனைவைச் சிதறடிக்கும் தருணங்கள் இவை. அவைதான் உலகிற்குப் பல கொள்ளைநோய்களை, பாசிசத்தை, போரைக் கொடையாக அளித்தன. அவைதான் இன்று உலகளாவிய மனிதப் பேரழிவிற்கான காரணங்களாக உள்ளன. இந்திய வலதுசாரி வளர்ச்சிக்கு அமெரிக்க என்.ஆர்.ஐ. மூலதனம் ஒரு முக்கியக் காரணம் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

உலகளாவிய வலதுசாரிகளின் வளர்ச்சியையும், அது வெகுமக்களிடையே கொண்டு சென்று, அம்மக்களின் உளவியலைத் தீர்மானிப்பதாக இருப்பதையும் இத்தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. இனவெறி, மதவெறி, ஆணாதிக்கக் கோமாளிகளை இன்று தலைவர்களாக்கிக் கொண்டாடும் மனநிலையில் மக்கள் கூட்டம் கட்டமைக்கப்படுகிறது.

ஒருபுறம் பொருளாதாரத்தின் ஏற்றத்தாழ்வு, மலைக்கும் மடுவிற்குமானதாக மாறியுள்ளது. மற்றொருபுறம், வேலையில்லாத் திண்டாட்டம். உலகெங்கிலும் நிதி மூலதன ஆதிக்கத்தில் சிக்கித் தவிக்கும் அரசுகள். போர்களைத் தூண்டும் ஆயுத வியாபார கார்பரேட் அரசியல் என உலகம் பல விநோதங்களை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது. மத்திய தர வர்க்கத்தின் வளர்ச்சி, இத்தகைய பிற்போக்கு வலதுசாரித்தனங்களை வரவேற்பதாக வாழவைப்பதாக மாறியுள்ளது.

இந்த உளவியலுக்கு எதிரான ஒரு பண்பாட்டு எதிர்ப்பை, வலுவாகக் கட்டமைக்காமல் இவர்களை இந்த வலது மயக்கத்திலிருந்து மீட்டெடுப்பது கடினம். கோமாளித்தனத்தை நோக்கி நகரும் கோமாளிகளின் ராஜ்ஜியமாக மாறியுள்ளது, இன்றைய உலகம்” என்கிறார் ஜமாலன்.

## ப்ளாஷ்பேக்



### கழகமே குடும்பம், குடும்பமே கழகம்...



ஜி.சம்மந்தம்

1996-ஆம் ஆண்டு மயிலாடுதுறை மாவட்டம், வழுவூரில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய தமிழ்நாடு முதலமைச்சருமான தலைவர் தளபதி அவர்கள் இக்கூட்டத்தில் முன்னிலை வகித்து உரையாற்றினார். அப்போது கிளைச் செயலாளராக இருந்த நானும் நிகழ்வில் பங்கேற்று, அன்பில் பொய்யாமொழி, அன்பகம் கலை, குத்தாலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கல்யாணம், பூம்புகார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கொண்டல் மோகனதாசன், நாகை அசோகன் ஆகியோரோடு மேடையில் வீற்றிருந்தேன். என் வாழ்நாளில் மறக்க முடியாத புகைப்படம் இது. இன்றைக்கு, என்னுடைய பெயர்த்தி ஆர்.மதுமிதா இளைஞர் அணியின் பேச்சுப் போட்டி மூலம் கழகத்தின் இளம் பேச்சாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, கலைஞரின் உடன்பிறப்பாக மனநிறைவை அளிக்கிறது.

**– ஜி.சம்மந்தம், முன்னாள் கிளைச் செயலாளர் வழுவூர், மயிலாடுதுறை**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### பாகுபாடற்ற சமத்துவச் சமுதாயம்!

1925-ஆம் ஆண்டில் பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கம், ‘பகுத்தறிவும் சுயமரியாதையும் அனைத்து மக்களின் பிறப்புரிமை’ எனப் பிரகடனம் செய்தது. பாகுபாடற்ற சமத்துவச் சமுதாயத்தை அமைப்பதை நோக்கமாகக் கொண்டது. இந்த இயக்கம் தனது அயராத செயல்பாடுகளினால் தமிழ்நாட்டைக் கடந்து சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் தாக்கம் செலுத்தியது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

654

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131